Koviloor Digital Library

அருள்மிகு விநாயகர் 1008 போற்றிகள்

ACC NO 38420

தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்

தமிழ்நாடு அரசு வெளியீடு

Koviloor Digital Library

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A.N. 38420
3/2

நன்றி

"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்"
எனும் முழக்கத்தை உருவாக்கித்

தமிழறிந்த பெருமக்கள் எல்லாம்
தாம் வணங்கும் தெய்வத்தைத்

தமிழால் வழிபட வேண்டும்
எனும் கருத்தை வலியுறுத்தி

அறநிலையத் துறையின் சார்பில்
போற்றிப் பாடல்களை

வெளியிடும் வாய்ப்பளித்த
பவள விழா நாயகர்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர்
அவர்கட்கு நன்றி!

- *இந்து சமய அறநிலையத் துறை.*

Koviloor Digital Library

தமிழில் போற்றிப் பாடல்கள்

- *மேம்பாட்டுக் குழு*

1. முனைவர் தி. முத்துக்கண்ணப்பர், சென்னை.
2. முனைவர் சுப. அண்ணாமலை, மதுரை.
3. முனைவர் வை. இரத்தினசபாபதி, சென்னை.
4. பேராசிரியர் பா. நமசிவாயம், திருப்பத்தூர்.
5. முனைவர் அ. அறிவொளி, திருச்சி.
6. முனைவர் தெ. ஞானசுந்தரம், சென்னை.
7. முனைவர் இரா. செல்வகணபதி, மயிலாடுதுறை.
8. புலவர் கோ. சாரங்கபாணி, புதுவை.
9. முனைவர் த. அமிர்தலிங்கம், சென்னை.
10. திரு எம்.என். வேங்கடவரதன், சென்னை.
11. திரு சு. இளங்கோவன், காஞ்சிபுரம்.

Koviloor Digital Library

3/2

முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்,**
எம்.ஏ., பி.எச்டி.,
தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

5.5.1998
தி.பி.2029/சித்திரை 22.

தமிழில் போற்றிப் பாடல்கள்

நீண்ட நாள் ஏக்கம் ஒன்று இன்று தீர்கிறது என்பதை நினைக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சி! இது ஒரு தனி மனிதனின் ஏக்கம் அன்று; ஒரு குமுகாயத்தின் (சமுதாயத்தின்) ஏக்கம்.

அதுவும் மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணையை ஏற்று என் தலைமையில் எங்கள் துறை எடுத்துக்கொண்ட கடுமையான முயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது.

தமிழில் போற்றிப் பாடல்களை உருவாக்குவதில் இரண்டு வகையான திட்டமும் செயல்பாடும் தேவைப்பட்டன. முதலில் இறை ஈடுபாடும் நூற்புலமையும் படைத்தவர்களை ஒரு குழுவாக அமைத்தோம். சிவபெருமான், திருமால், முருகன், விநாயகர் முதலிய அனைத்துத் தெய்வங்களுக்குமான போற்றிப் பாடல்களைத் தொகுக்கச் செய்தோம். இதில் எவரும் சொந்தக் கவிதை எழுதிவிடக் கூடாது. தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப்பிரபந்தம், திருமுருகாற்றுப்படை போன்ற மூல நூல் வரிகள் ஒரே சீராக, இரு சீராக, முச்சீராக அமையுமாறு பணித்தோம். அதன்படி அமைத்துக்கொண்டபின் அவற்றை அவையில் படித்து வரிவரியாக ஒழுங்கு செய்தோம். ஓர் அரங்கேற்றமே அங்கு நிகழ்ந்தது. இந்த நேரத்தில் கோயில்களில் இவற்றைப் பயன்படுத்தி, நாடி வரும் இறையன்பர்களை மகிழ்விக்கும் சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் ஆகியோரில் குறிப்பிட்ட சிலரையும் அழைத்து அவர்கள் முன்னிலையில்தான் இந்த வரிகள் அரங்கேற்றப்பட்டன. இது இரண்டாவது கட்டம்.

Koviloor Digital Library

அதன்பின் இந்த முயற்சி பற்றிய கருத்து, திருக்கோயில்கள் உயர்மட்டக் குழுவிலும் வைக்கப்பட்டு ஏற்கப்பட்டது. அதன்பின் உருவாக்கப்பட்ட போற்றிப் பாடல்கள் தமிழகத்தில் உள்ள குறிப்பிடத்தக்க ஆதினகர்த்தர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களி- டமிருந்து திருத்தங்களும் பெறப்பட்டன. அந்தத் திருத்தங்களுடன் கூடிய பட்டியல் இறுதி செய்யப்பட்டு இன்று அச்சுவடிவம் பெறுவது குறித்து உள்ளபடியே பெரிதும் மகிழ்கின்றேன். குழுவினருடன் பல மணிநேரம் நானும் அமர்ந்து வரிகளைச் செப்பம் செய்ததிலும், எங்கள் துறையின் சார்பில் இதைச் செயற்படுத்துவதிலும், தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சிக்கால முத்திரை என்று இதனை வெளியிடுவதிலும் (பிரகடனப்படுத்தல்) பெருமையடைகிறேன்.

இப்போது தமிழக மகளிர் பலர் அம்மன் கோயில்களை அதிகம் நாடுகின்றனர். அதனால் மாரியம்மன், கருமாரியம்மன் ஆகியோர் குறித்த போற்றி நூல்களும் வெளியிடப்படுகின்றன.

அப்பரும், சம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மணிவாசகரும், ஆழ்வார்களும் விரும்பிப் போற்றிய தமிழ் வழிபாட்டை வழிபடச் செல்லும் ஒவ்வொருவரும் விரும்பிக் கேட்டு அதன் பயனை நுகர்வார்களாக!

ஆணையர் தலைமையில் அலுவலர்குழு கடுமையாக உழைத்தது. நூல் உருவாக்கத்திற்கு வள்ளல் உள்ளம் கொண்ட பலர் தாமே உதவ முன்வந்துள்ளனர்.

இவ்வகையில் துறைச் செயலர், ஆணையர், தமிழ் அறிஞர்கள், உயர்மட்ட அறிவுரைக் குழு, உவந்து உதவ முன்வந்த வள்ளல்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

"என்னை நன்றாகக் கலைஞர் படைத்தார்
அன்னைத் தமிழுக்கு அணிசெய்ய மாறே"

என்ற வரிகளால் என்னை இப்பணிக்கு ஆளாக்கிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்குத் தலைதாழ்ந்த வணக்கங்களை உரித்தாக்குகிறேன்.

அன்புடன்

மு. தமிழ்க்குடிமகன்

Koviloor Digital Library

தமிழ் அருச்சனை - அருள் வேண்டுதல்

(சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய
இந்நன்னாளில்..அவர்களுக்கும்
அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும்,
சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம்,
பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும்
பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள்
பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல
வாழ்வெய்தவும்

உம் திருவடிகளில்
மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

Koviloor Digital Library

அருள்மிகு விநாயகர்
1008 போற்றிகள்

1. ஓம் அகத்துறையும் கணேசா போற்றி
2. ஓம் அகந்திகழ் அருளே போற்றி
3. ஓம் அகரவுகர மகரமே போற்றி
4. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
5. ஓம் அகன்ற வெளியே போற்றி
6. ஓம் அங்குசக் கரத்தாய் போற்றி
7. ஓம் அசையா நெஞ்சருள் போற்றி
8. ஓம் அசைவற்று இருப்பாய் போற்றி
9. ஓம் அச்சம் ஓட்டுவாய் போற்றி
10. ஓம் அஞ்சாமை அருள்வாய் போற்றி
11. ஓம் அஞ்சேல் என்பாய் போற்றி.
12. ஓம் அடிதொழ அருள்வாய் போற்றி.
13. ஓம் அடித்தொண்டு ஏற்பாய் போற்றி.
14. ஓம் அடியவர் அறிவே போற்றி.
15. ஓம் அடியவர் அன்பே போற்றி.
16. ஓம் அடியவர் புந்தியாய் போற்றி.
17. ஓம் அடியார் உளத்தாய் போற்றி.
18. ஓம் அடியாரை ஆள்வாய் போற்றி.
19. ஓம் அடியார்க்கு அருள்வாய் போற்றி.
20. ஓம் அடியார்க்கு எளியாய் போற்றி.
21. ஓம் அடியார்க்கு இனியாய் போற்றி.

Koviloor Digital Library

22. ஓம் அடியார்க்குத் தேனே போற்றி.
23. ஓம் அடியிணை தருவாய் போற்றி.
24. ஓம் அடைந்தார்க்கு அருள்வாய் போற்றி.
25. ஓம் அண்டத்துயிர் ஆனாய் போற்றி.
26. ஓம் அண்டத்தை ஆள்வாய் போற்றி.
27. ஓம் அண்டங் கடந்தாய் போற்றி.
28. ஓம் அத்தனே அருள்வாய் போற்றி.
29. ஓம் அத்திமுகனே போற்றி.
30. ஓம் அத்துவிதப் பொருளே போற்றி.
31. ஓம் அந்தம் ஆனாய் போற்றி.
32. ஓம் அந்தமே ஆதியே போற்றி.
33. ஓம் அந்தி நண்பகலே போற்றி.
34. ஓம் அமரர் தொழுசரணா போற்றி.
35. ஓம் அமரரைக் காப்பாய் போற்றி.
36. ஓம் அமரர்கள் நாதா போற்றி.
37. ஓம் அமுதின் தெளிவே போற்றி.
38. ஓம் அமைதி அருள்வாய் போற்றி.
39. ஓம் அம்மையின் அருள்பெற்றோய் போற்றி.
40. ஓம் அயராமல் அணைப்பாய் போற்றி.
41. ஓம் அயன்அரிக்கு முதலே போற்றி.
42. ஓம் அயன்துதி அறிவே போற்றி.
43. ஓம் அரன்மகிழ் அத்தியே போற்றி.
44. ஓம் அரன்மால் தலைவா போற்றி.
45. ஓம் அரக்கரை வென்றாய் போற்றி.

Koviloor Digital Library

46. ஓம் அரக்கர்க்கு அருளினாய் போற்றி.
47. ஓம் அரவத்து அரையாய் போற்றி.
48. ஓம் அரியதோர் அறிவே போற்றி.
49. ஓம் அரியனே எளியனே போற்றி.
50. ஓம் அருட்களிறே போற்றி.
51. ஓம் அருவே உருவே போற்றி.
52. ஓம் அருள் வடிவே போற்றி.
53. ஓம் அருள்வழி காட்டுவாய் போற்றி.
54. ஓம் அருளானந்தமே போற்றி.
55. ஓம் அருள் விசாலா போற்றி.
56. ஓம் அருட் சிவக்களிறே போற்றி.
57. ஓம் அரும்பே அலரே போற்றி.
58. ஓம் அரும்பொருட் கன்றே போற்றி.
59. ஓம் அருளும் அன்பும் ஆனாய் போற்றி.
60. ஓம் அருளே உன்னுரு ஆனாய் போற்றி.
61. ஓம் அருள்முகம் உடையாய் போற்றி.
62. ஓம் அருளும் அரன்சேய் போற்றி.
63. ஓம் அருள்தரும் களிறே போற்றி.
64. ஓம் அருட்குணக் களிறே போற்றி.
65. ஓம் அருளானந்தத்து அழுத்துவாய் போற்றி.
66. ஓம் அலங்கல் மார்பா போற்றி.
67. ஓம் அலையாது அருள்வாய் போற்றி.
68. ஓம் அலைமனம் அடக்குவாய் போற்றி.
69. ஓம் அல்லல் அறுப்பாய் போற்றி.

Koviloor Digital Library

70. ஓம் அவுணர் ஆசு அறுத்தாய் போற்றி.
71. ஓம் அளவிலாப் பெருமையாய் போற்றி.
72. ஓம் அளவுக்கு அடங்காய் போற்றி.
73. ஓம் அவா அறுப்பாய் போற்றி.
74. ஓம் அறக்கடலே போற்றி.
75. ஓம் அறக்கருணையாய் போற்றி.
76. ஓம் அறிபவன் நீயே போற்றி.
77. ஓம் அறிவாய் விளங்குவாய் போற்றி.
78. ஓம் அறியாமை அகற்றுவாய் போற்றி.
79. ஓம் அறிவருள் தருவாய் போற்றி.
80. ஓம் அறிவானந்த உருவே போற்றி.
81. ஓம் அறிவிப்பான் நீயே போற்றி.
82. ஓம் அறிவெலாம் நீயே போற்றி.
83. ஓம் அறிவை ஊட்டுவாய் போற்றி.
84. ஓம் அறுகு சூடியே போற்றி.
85. ஓம் அறுசுவையின் மிக்கோய் போற்றி.
86. ஓம் அறுவகைப் பருவமே போற்றி.
87. ஓம் அற்புதக் கற்பகமே போற்றி.
88. ஓம் அற்றவர்க்கு ஆரமுதே போற்றி.
89. ஓம் அனந்த குணத்தாய் போற்றி.
90. ஓம் அனேக வடிவினாய் போற்றி.
91. ஓம் அனைத்தும் உனக்கே போற்றி.
92. ஓம் அனைத்தும் படைப்போய் போற்றி.
93. ஓம் அனைத்தும் காப்போய் போற்றி.

Koviloor Digital Library

94. ஓம் அனைத்தும் துடைப்போய் போற்றி.
95. ஓம் அனைத்தும் ஆனாய் போற்றி.
96. ஓம் அனைத்தும் அருள்வோய் போற்றி.
97. ஓம் அன்பர் உள்ளத்தாய் போற்றி.
98. ஓம் அன்பர்பசி தீர்ப்பாய் போற்றி.
99. ஓம் அன்பர்பணியும் தாளாய் போற்றி.
100. ஓம் அன்பர்க்கான நிலையே போற்றி.
101. ஓம் அன்புடன் தொழுதோம் போற்றி.
102. ஓம் அன்புருவானாய் போற்றி.
103. ஓம் அன்பே கணேசா போற்றி.
104. ஓம் ஆக்கமாய் ஆளுக போற்றி.
105. ஓம் ஆங்காரந் தீர்ப்பாய் போற்றி.
106. ஓம் ஆசை தீரக் கொடுப்பாய் போற்றி.
107. ஓம் ஆட்கொண்டு அருள்வாய் போற்றி.
108. ஓம் ஆணவப் பகையே போற்றி.
109. ஓம் ஆண்பெண் நீயே போற்றி.
110. ஓம் ஆதங்கம் தீர்ப்பாய் போற்றி.
111. ஓம் ஆதார கணபதியே போற்றி.
112. ஓம் ஆதார மூலத்தாய் போற்றி.
113. ஓம் ஆதி அனாதியே போற்றி.
114. ஓம் ஆதி கணபதியே போற்றி.
115. ஓம் ஆபத்துச் சகாயா போற்றி.
116. ஓம் ஆரண முதலே போற்றி.
117. ஓம் ஆரணக் கூத்தாய் போற்றி.

Koviloor Digital Library

118. ஓம் ஆராஇன்ப அருளே போற்றி.
119. ஓம் ஆர்வத்தார் செல்வமே போற்றி.
120. ஓம் ஆவித்துணையே போற்றி.
121. ஓம் ஆவியின் இனியாய் போற்றி.
122. ஓம் ஆவி உனக்கே போற்றி.
123. ஓம் ஆழத்துப் பிள்ளையே போற்றி.
124. ஓம் ஆழ்ந்த மோனமே போற்றி.
125. ஓம் ஆளாக அடைந்தேன் போற்றி.
126. ஓம் ஆனந்த பூரணா போற்றி.
127. ஓம் ஆனந்த வெள்ளமே போற்றி.
128. ஓம் ஆனைக் கன்றே போற்றி.
129. ஓம் இகபரம் உதவுவாய் போற்றி.
130. ஓம் இங்கும் எங்கும் ஆனாய் போற்றி.
131. ஓம் இசைந்து அருள்வாய் போற்றி.
132. ஓம் இசைபெற அருள்வாய் போற்றி.
133. ஓம் இடர் களைவாய் போற்றி.
134. ஓம் இடரிலா வாழ்வு அருள்வாய் போற்றி.
135. ஓம் இடக்கண் மதியாய் போற்றி.
136. ஓம் இடும்பை கெடுப்பாய் போற்றி.
137. ஓம் இடுமலர் ஏற்பாய் போற்றி.
138. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி.
139. ஓம் இண்டைச் சடையாய் போற்றி.
140. ஓம் இத்திசையும் எத்திசையும் ஆனாய் போற்றி.
141. ஓம் இந்திரர் கோவே போற்றி.

Koviloor Digital Library

142. ஓம் இபமா முகனே போற்றி.
143. ஓம் இப்பொழுதே ஆட்கொள்ளுவாய் போற்றி.
144. ஓம் இமயச் செல்விச்சேயே போற்றி.
145. ஓம் இமையவர் ஏறே போற்றி.
146. ஓம் இயம்புமந்திரம் கொள்வாய் போற்றி.
147. ஓம் இம்மை நலந்தருவாய் போற்றி.
148. ஓம் இரண்டற நிற்பாய் போற்றி.
149. ஓம் இரண்டும் ஆனாய் போற்றி.
150. ஓம் இரவும் பகலும் ஆனாய் போற்றி.
151. ஓம் இருக்கும் கடந்தாய் போற்றி.
152. ஓம் இருமுறச் செவியாய் போற்றி.
153. ஓம் இருளற நிற்பாய் போற்றி.
154. ஓம் இருளும் ஒளியும் ஆனாய் போற்றி.
155. ஓம் இருள் கடிந்து ஆள்வாய் போற்றி.
156. ஓம் இருவினையறுப்பாய் போற்றி.
157. ஓம் இலகறிவு வடிவே போற்றி.
158. ஓம் இலகுமலை மார்பா போற்றி.
159. ஓம் இலங்குமுடியாய் போற்றி.
160. ஓம் இளம்பிறை எயிற்றாய் போற்றி.
161. ஓம் இளஞாயிற்று எழிலே போற்றி.
162. ஓம் இனிதே அருள்வாய் போற்றி.
163. ஓம் இனிமைத் தருவே போற்றி.
164. ஓம் இனியவர்க்கு உறவே போற்றி.
165. ஓம் இன்பம் ஈவாய் போற்றி.

166. ஓம் இன்பம் பெருக்குவாய் போற்றி.
167. ஓம் இன்ப முகிலே போற்றி.
168. ஓம் இன்ப மழையே போற்றி.
169. ஓம் இன்புற அருள்வாய் போற்றி.
170. ஓம் இன்ப துன்பம் ஆனாய் போற்றி.
171. ஓம் ஈசனார் மகனே போற்றி.
172. ஓம் உகத்துக்கு ஆதியே போற்றி.
173. ஓம் உகப்பார்க்கு அருள்வாய் போற்றி.
174. ஓம் உச்சி மகுடத்தாய் போற்றி.
175. ஓம் உடலே உணர்வே போற்றி.
176. ஓம் உணராரை ஒட்டாய் போற்றி.
177. ஓம் உணர்சிந்தை யகலாய் போற்றி.
178. ஓம் உணர்வு பெருக்குவாய் போற்றி.
179. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
180. ஓம் உதவிட வல்லோய் போற்றி.
181. ஓம் உத்தமி புதல்வா போற்றி.
182. ஓம் உபதேசம் அருள்வாய் போற்றி.
183. ஓம் உமையாள் மகனே போற்றி.
184. ஓம் உம்பர்க்கு ஆதியே போற்றி.
185. ஓம் உயர்கதி உய்ப்பாய் போற்றி.
186. ஓம் உயர்வுற உயர்ந்தோய் போற்றி.
187. ஓம் உயர்ந்தோர் உவகையே போற்றி.
188. ஓம் உயர்நிலைக்கு உயர்த்துவாய் போற்றி.
189. ஓம் உயர்நிலை தருவாய் போற்றி.

Koviloor Digital Library

190. ஓம் உயிரில் ஒளிர்வாய் போற்றி.
191. ஓம் உயிரினுக்கு உயிரே போற்றி.
192. ஓம் உயிருடன் ஆனாய் போற்றி.
193. ஓம் உயிரெலாம் நீயே போற்றி.
194. ஓம் உயிரே உணர்வே போற்றி.
195. ஓம் உயிர்கட்கு இன்பம் அருள்வாய் போற்றி.
196. ஓம் உயிர்க்கெலாம் நலமே போற்றி.
197. ஓம் உயிர் பயிருக்கு மழையே போற்றி.
198. ஓம் உயிர்த்துணையே போற்றி.
199. ஓம் உயிர்த்தொகை காப்பாய் போற்றி.
200. ஓம் உயிர்ப்போதம் கடந்தோய் போற்றி.
201. ஓம் உய்வழி உரைப்பாய் போற்றி.
202. ஓம் உய்யவைத்து ஆள்வாய் போற்றி.
203. ஓம் உய்வகை உதவுவாய் போற்றி.
204. ஓம் உய்வகை ஆனாய் போற்றி.
205. ஓம் உய்வருள் பெருமான் போற்றி.
206. ஓம் உரையும் பொருளும் கடந்தோய் போற்றி.
207. ஓம் உலகம் காப்பாய் போற்றி.
208. ஓம் உலகம் ஆனாய் போற்றி.
209. ஓம் உலகத் துயர் நீக்குவாய் போற்றி.
210. ஓம் உலகந் தொழப்படுவாய் போற்றி.
211. ஓம் உலகாள் பெரியோய் போற்றி.
212. ஓம் உலகின் முதலே போற்றி.
213. ஓம் உலகிருள் கிழிப்பாய் போற்றி.

Koviloor Digital Library

214. ஓம் உலகுகளாய் ஒளிர்வாய் போற்றி.
215. ஓம் உலகுயிர் தாங்குவாய் போற்றி.
216. ஓம் உலகுக்கு ஒருவா போற்றி.
217. ஓம் உலகெலாம் புரப்பாய் போற்றி.
218. ஓம் உலவா இன்பப்பொருளே போற்றி.
219. ஓம் உலையாக் களிறே போற்றி.
220. ஓம் உவக்கும் சரணம் உடையாய் போற்றி.
221. ஓம் உள்ளக் கள்வா போற்றி.
222. ஓம் உள்ளத் தறியுளாய் போற்றி.
223. ஓம் உள்ளத்து ஒடுங்குவாய் போற்றி.
224. ஓம் உள்ளம் உயர்த்துவாய் போற்றி.
225. ஓம் உள்ளம் உகப்பாய் போற்றி.
226. ஓம் உள்ளமே புகுவாய் போற்றி.
227. ஓம் உள்ளநிறை கனியே போற்றி.
228. ஓம் உள்ளுவார்க்கு உதவுவோய் போற்றி.
229. ஓம் உள்ளெழும் அமுதே போற்றி.
230. ஓம் உள்நிறை ஒளியே போற்றி.
231. ஓம் உறவாய் அடிதருவாய் போற்றி.
232. ஓம் உறுநன்மை யருள்வாய் போற்றி.
233. ஓம் உன்சார்பு அளிப்பாய் போற்றி.
234. ஓம் உன்பதம் அருள்வாய் போற்றி.
235. ஓம் உன்துணை அருள்வாய் போற்றி.
236. ஓம் உனைநினையத்தருவாய் போற்றி.
237. ஓம் உன்னையே அடைந்தோம் போற்றி.

Koviloor Digital Library

238. ஓம் உன்னையே உன்னினேன் போற்றி.
239. ஓம் ஊரும் நீயே ஆனாய் போற்றி.
240. ஓம் ஊழி தோறும் நிலைப்பாய் போற்றி.
241. ஓம் ஊறு தீர்ப்பாய் போற்றி.
242. ஓம் ஊறும் மதத்தாய் போற்றி.
243. ஓம் ஊனவிருள் ஒழிப்பாய் போற்றி.
244. ஓம் ஊனம் ஒழிப்பாய் போற்றி.
245. ஓம் எங்கள் கருத்துளாய் போற்றி.
246. ஓம் எங்கள் பிரானே போற்றி.
247. ஓம் எங்கும் நின்றாய் போற்றி.
248. ஓம் எண்டிசை ஆனாய் போற்றி.
249. ஓம் எண்டிசைத் தேவா போற்றி.
250. ஓம் எண்தோளன் செல்வா போற்றி.
251. ஓம் எண்ணிய ஈவாய் போற்றி.
252. ஓம் எண்ணும்முகமாய் அருள்வாய் போற்றி.
253. ஓம் எண்ணிலாச் சேவடியாய் போற்றி.
254. ஓம் எண்ணிலாத் திண்டோளாய் போற்றி.
255. ஓம் எண்ணிலாத் திருவுருவே போற்றி.
256. ஓம் எண்ணிலாத் திருப்பெயரே போற்றி.
257. ஓம் எண்ணிலாத் திருமுடியே போற்றி.
258. ஓம் எண்ணிலா இயல்பினாய் போற்றி.
259. ஓம் எதிரிலாப் போகமே போற்றி.
260. ஓம் எத்திக்கும் ஒளியே போற்றி.
261. ஓம் எந்தையே தாயே போற்றி.

Koviloor Digital Library

262. ஓம் எப்பொருளிலும் உள்ளாய் போற்றி.
263. ஓம் எப்பொருளும் ஆனாய் போற்றி.
264. ஓம் எம் காலகாலா போற்றி.
265. ஓம் எம்பிரான் ஆனாய் போற்றி.
266. ஓம் எம்பிழை பொறுப்பாய் போற்றி.
267. ஓம் எம்பெருமானே போற்றி.
268. ஓம் எம்குடிவாழ்வே போற்றி.
269. ஓம் எம்முளக் கருத்தே போற்றி.
270. ஓம் எம்மையாள்வாய் போற்றி.
271. ஓம் எருக்கமலர் சூடுவாய் போற்றி.
272. ஓம் எல்லார்க்கும் அணியே போற்றி.
273. ஓம் எல்லையில் இன்ப அருளே போற்றி.
274. ஓம் எழில்வளர் சோதியே போற்றி.
275. ஓம் எளியவர் வலிமையே போற்றி.
276. ஓம் என்றன் களைகணே போற்றி.
277. ஓம் என்றும் உள்ளாய் போற்றி.
278. ஓம் எனக்கு அமுதானாய் போற்றி.
279. ஓம் எனது அற்புதமே போற்றி.
280. ஓம் எனையுடிமை கொள்வாய் போற்றி.
281. ஓம் என்னுளம் இருப்பாய் போற்றி.
282. ஓம் என்னை அறிவிப்பாய் போற்றி.
283. ஓம் என்னைக் காத்தாய் போற்றி.
284. ஓம் என் வாழ்வுக்கு அணியே போற்றி.
285. ஓம் என் இடர் தீர்ப்பாய் போற்றி.

Koviloor Digital Library

286. ஓம் என்நிலை உயர்த்துவாய் போற்றி.
287. ஓம் என்னுயிர் ஆள்வாய் போற்றி.
288. ஓம் என்னுளங் கவர்ந்தாய் போற்றி.
289. ஓம் என்னுளம் பிரியாய் போற்றி.
290. ஓம் என்னுயிர்க்கு அமுதே போற்றி.
291. ஓம் என்னுடன் ஆனாய் போற்றி.
292. ஓம் என்னைப் பணிகொள்வாய் போற்றி.
293. ஓம் என் வினையறுப்பாய் போற்றி.
294. ஓம் ஏகதந்தத்து இறைவா போற்றி.
295. ஓம் ஏகமாய் வதிவாய் போற்றி.
296. ஓம் ஏக வெளியே போற்றி.
297. ஓம் ஏகன் அனேகன் ஆனாய் போற்றி.
298. ஓம் ஏதம் கடந்தாய் போற்றி.
299. ஓம் ஏத்த எளியாய் போற்றி.
300. ஓம் ஏத்த வருவாய் போற்றி.
301. ஓம் ஏரம்ப கணபதியே போற்றி.
302. ஓம் ஏழுலகும் தொழப்படுவாய் போற்றி.
303. ஓம் ஏழைக்கு இரங்குவாய் போற்றி.
304. ஓம் ஏறுகந்தான் ஏறே போற்றி.
305. ஓம் ஏறுவினை தீர்ப்பாய் போற்றி.
306. ஓம் ஐங்கர விநாயகா போற்றி.
307. ஓம் ஐந்தெழுத்து ஆனாய் போற்றி.
308. ஓம் ஐந்தெழுத்து அருள்வாய் போற்றி.
309. ஓம் ஐந்தொழிற் காரணா போற்றி.

Koviloor Digital Library

310. ஓம் ஐம்பூதத்து ஒளிர்வாய் போற்றி.
311. ஓம் ஐம்புலப்பூசல் அடக்குவாய் போற்றி.
312. ஓம் ஐம்முகன் மகனே போற்றி.
313. ஓம் ஒப்பிலா உயர்வே போற்றி.
314. ஓம் ஒப்பிலாத் துதிக்கையாய் போற்றி.
315. ஓம் ஒருகோட்டு இருசெவியாய் போற்றி.
316. ஓம் ஒளி எயிற்றாய் போற்றி.
317. ஓம் ஒளிப் பிழம்புருவே போற்றி.
318. ஓம் ஒளி விளைதேனே போற்றி.
319. ஓம் ஒளி நுதல் உடையாய் போற்றி.
320. ஓம் ஒளிபெற அருள்வாய் போற்றி.
321. ஓம் ஒளியுளம் தருவாய் போற்றி.
322. ஓம் ஒள்ளியர் உளத்தாய் போற்றி.
323. ஓம் ஒன்றாம் ஒளியே போற்றி.
324. ஓம் ஒன்றி நின்றுணர்வாய் போற்றி.
325. ஓம் ஓமெனும் பொருளே போற்றி.
326. ஓம் ஓங்காரத்து உதிப்பாய் போற்றி.
327. ஓம் ஓங்காரத்து உள்ளொளியே போற்றி.
328. ஓம் ஓங்காரத்து ஒடுங்குவாய் போற்றி.
329. ஓம் ஔவியம் அறுப்பாய் போற்றி.
330. ஓம் கங்கை வேணியாய் போற்றி.
331. ஓம் கசிந்தோர் களிப்பே போற்றி.
332. ஓம் கசிவார் கரும்பே போற்றி.
333. ஓம் கடதடக் கபாலனே போற்றி.

Koviloor Digital Library

ஓம் கடமா முகத்தாய் போற்றி.

ஓம் கடமை செய அருள்வாய் போற்றி.

ஓம் கடியாக் கதியே போற்றி.

ஓம் கடுவிருட் சுடரே போற்றி.

ஓம் கணநாதனே போற்றி.

ஓம் கணபதி களிறே போற்றி.

ஓம் கணபதி தேவா போற்றி.

ஓம் கணம் புகழ் கணபதி போற்றி.

ஓம் கண்டுனைக்களிக்க அருள்வாய் போற்றி.

ஓம் கண்ணுதற் களிறே போற்றி.

ஓம் கண்ணுளாய் போற்றி.

ஓம் கண்ணுள் நிற்பாய் போற்றி.

ஓம் கண்மணி ஒப்பாய் போற்றி.

ஓம் கமழ்தார் அணிந்தாய் போற்றி.

ஓம் கயமுகற் கடிந்தாய் போற்றி.

ஓம் கரம் அங்குசத்தாய் போற்றி.

ஓம் கரிசினோர்க்கு உதவுவாய் போற்றி.

ஓம் கரிமுகக் கணபதியே போற்றி.

ஓம் கரிமுகத் தூமணியே போற்றி.

ஓம் கருணைக்கு அரசே போற்றி.

ஓம் கருணைக் கடலே போற்றி.

ஓம் கருதினார்க்கு இனிப்பாய் போற்றி.

ஓம் கருதுவோர் நினைவே போற்றி.

ஓம் கருத்தின் உள்ளாய் போற்றி.

Koviloor Digital Library

358. ஓம் கருமம் முடிப்பாய் போற்றி.
359. ஓம் கரும்பே கதலியே போற்றி.
360. ஓம் கருவையும் காப்பாய் போற்றி.
361. ஓம் கரையிலாக் கருணையாய் போற்றி.
362. ஓம் கலசக் கரத்தாய் போற்றி.
363. ஓம் கலிவலி கெடுப்பாய் போற்றி.
364. ஓம் கலையெலாம் ஆனாய் போற்றி.
365. ஓம் கல்வி தருவாய் போற்றி.
366. ஓம் கவினுறுகாவே போற்றி.
367. ஓம் கழலடி தருவாய் போற்றி.
368. ஓம் களங்கம் கெடுப்பாய் போற்றி.
369. ஓம் களிதருங்கன்றே போற்றி.
370. ஓம் களியானைக் கன்றே போற்றி.
371. ஓம் கள்வரைக் கைப்பாய் போற்றி.
372. ஓம் கள்ளந் தீர்ப்பாய் போற்றி.
373. ஓம் கறைக்கண்டன் மகனே போற்றி.
374. ஓம் கற்றவர் கனியே போற்றி.
375. ஓம் கற்றோர் கருத்தே போற்றி.
376. ஓம் கற்பக விநாயகா போற்றி.
377. ஓம் கற்பகச் சோலையே போற்றி.
378. ஓம் கனகத் திரளே போற்றி.
379. ஓம் கனக்கும் மாலையாய் போற்றி.
380. ஓம் கனியின் வித்தே போற்றி.
381. ஓம் கனியின் சுவையே போற்றி.

Koviloor Digital Library

382. ஓம் கனிவே பெருக்குவாய் போற்றி.
383. ஓம் கன்மத்தை நீக்குவாய் போற்றி.
384. ஓம் கன்னல் ஆனாய் போற்றி.
385. ஓம் காங்கேயன் தமையா போற்றி.
386. ஓம் காசினி தழைப்பிப்பாய் போற்றி.
387. ஓம் காணில் இனிப்பாய் போற்றி.
388. ஓம் காத்து எனை ஆள்வாய் போற்றி.
389. ஓம் காப்பாய் கணபதியே போற்றி.
390. ஓம் காப்பாய் அமைந்தாய் போற்றி.
391. ஓம் காப்பாய் மூலமே போற்றி.
392. ஓம் காமனை விலக்குவாய் போற்றி.
393. ஓம் காமக்களை தீர்ப்பாய் போற்றி.
394. ஓம் காரண கணபதியே போற்றி.
395. ஓம் காலங்கடந்தோய் போற்றி.
396. ஓம் காலபூசை கொள்வாய் போற்றி.
397. ஓம் காலனைக் காய்வாய் போற்றி.
398. ஓம் காவிரி தரு சீரோய் போற்றி.
399. ஓம் கிண்கிணிப் பதத்தாய் போற்றி.
400. ஓம் கிம்புரிக் கொம்பினாய் போற்றி.
401. ஓம் கிருதயுகம் அருள்வாய் போற்றி.
402. ஓம் கிளரொளிவடிவே போற்றி.
403. ஓம் குஞ்சரக் குரிசிலே போற்றி.
404. ஓம் குஞ்சர முகனே போற்றி.
405. ஓம் குணமும் ஆனாய் போற்றி.

Koviloor Digital Library

406. ஓம் குணக்குன்றே போற்றி.
407. ஓம் குண ஆலயனே போற்றி.
408. ஓம் குமரன் முன்னவா போற்றி.
409. ஓம் கும்ப மதக் களிறே போற்றி.
410. ஓம் குருநாத கணபதியே போற்றி.
411. ஓம் குருவாய் வருவாய் போற்றி.
412. ஓம் குருவே காப்பாய் போற்றி.
413. ஓம் குறிக்கோள் ஆனாய் போற்றி.
414. ஓம் குறைவிலா அருளே போற்றி.
415. ஓம் குறைவிலா நிறைவே போற்றி.
416. ஓம் கூரிடர் தீர்ப்பாய் போற்றி.
417. ஓம் கூவிள மாலையாய் போற்றி.
418. ஓம் கெடுவினை தீர்ப்பாய் போற்றி.
419. ஓம் கைப்போதகமே போற்றி.
420. ஓம் கைகம்முகனே போற்றி.
421. ஓம் கைகம்முகவாரணமே போற்றி.
422. ஓம் கையிற்கொம்பினாய் போற்றி.
423. ஓம் கையில் மூக்கினாய் போற்றி.
424. ஓம் கொடுமை தீர்ப்பாய் போற்றி.
425. ஓம் கோதிலே அமுதே போற்றி.
426. ஓம் கோமான் உன் பாதமே போற்றி.
427. ஓம் கோலப்பிரானே போற்றி.
428. ஓம் சகல செல்வமும் ஆனாய் போற்றி.
429. ஓம் சக்கரம் தரித்தாய் போற்றி.

Koviloor Digital Library

430. ஓம் சங்கநிதி ஆனாய் போற்றி.
431. ஓம் சங்கத் தமிழ் தருவாய் போற்றி.
432. ஓம் சச்சிதானந்தா போற்றி.
433. ஓம் சத்தியாம் கதிரே போற்றி.
434. ஓம் சந்திரசேகரா போற்றி.
435. ஓம் சரணம் அடைந்தோர் சார்பே போற்றி.
436. ஓம் சலனம் அறுப்பாய் போற்றி.
437. ஓம் சாகரம் ஏழும் ஆனாய் போற்றி.
438. ஓம் சாத்துவீக அரனே போற்றி.
439. ஓம் சாந்தின் மணமே போற்றி.
440. ஓம் சார்வாரை உயர்த்துவாய் போற்றி.
441. ஓம் சாலத்தயை செய்வாய் போற்றி.
442. ஓம் சிதைவு நீக்குவாய் போற்றி.
443. ஓம் சித்தத் தேனே போற்றி.
444. ஓம் சித்தம் உறைவாய் போற்றி.
445. ஓம் சித்தனே அருள்வாய் போற்றி.
446. ஓம் சித்தந்தெளிவிப்பாய் போற்றி.
447. ஓம் சித்திகள் தருவாய் போற்றி.
448. ஓம் சித்திக் களிறே போற்றி.
449. ஓம் சித்தி புத்தி மணந்தோய் போற்றி.
450. ஓம் சித்தியே செய்வாய் போற்றி.
451. ஓம் சித்தி விநாயகா போற்றி.
452. ஓம் சிந்தாகுலந் தீர்ப்பாய் போற்றி.
453. ஓம் சிந்தா மணியே போற்றி.

Koviloor Digital Library

454. ஓம் சிந்திப்பார்க்கு அருள்வாய் போற்றி.
455. ஓம் சிந்துரக் களபமே போற்றி.
456. ஓம் சிந்துரத் திலகா போற்றி.
457. ஓம் சிந்தையிற் பெயராய் போற்றி.
458. ஓம் சிலைநிகர் கொம்பினாய் போற்றி.
459. ஓம் சிவக் களிறே போற்றி.
460. ஓம் சிவகணபதியே போற்றி.
461. ஓம் சிவனவன் சேயே போற்றி.
462. ஓம் சிவானந்தமே போற்றி.
463. ஓம் சிவையின் செல்வா போற்றி.
464. ஓம் சீர்பெற அருள்வாய் போற்றி.
465. ஓம் சீராரின்பமே போற்றி.
466. ஓம் சீரிய ஆனையே போற்றி.
467. ஓம் சுகத்திற்கு ஆதியே போற்றி.
468. ஓம் சுரர்களுக்கு ஈசா போற்றி.
469. ஓம் சுவை சேர்கனியே போற்றி.
470. ஓம் சுற்றமும் ஆனாய் போற்றி.
471. ஓம் சுற்றமாய்ச் சூழ்வாய் போற்றி.
472. ஓம் சூழ்ச்சிக்கு அரியாய் போற்றி.
473. ஓம் செக்கர் மேனியாய் போற்றி.
474. ஓம் செஞ்சடைச் சேகரா போற்றி.
475. ஓம் செந்தாமரைச் சேவடியாய் போற்றி.
476. ஓம் செமபொருள் துணிவே போற்றி.
477. ஓம் செம்பொற் கழலோய் போற்றி.

Koviloor Digital Library

478. ஓம் செம்மை நினைவருள்வாய் போற்றி.
479. ஓம் செம்மை சேர்ப்பாய் போற்றி.
480. ஓம் செய்வினை முதலே போற்றி.
481. ஓம் செயப்படுபொருளே போற்றி.
482. ஓம் செய்யுந்தொழிலே போற்றி.
483. ஓம் செய்வினைப் பயனே போற்றி.
484. ஓம் செய்கருமம் முடிப்பாய் போற்றி.
485. ஓம் செயலொன்று அறியார் துணையே போற்றி.
486. ஓம் செயிர்எலாம் தீர்ப்பாய் போற்றி.
487. ஓம் செல்வக் கணேசா போற்றி.
488. ஓம் செல்வம் அருள்வாய் போற்றி.
489. ஓம் செல்வநீறு அருள்வாய் போற்றி.
490. ஓம் செவ்வேள் முன்னவா போற்றி.
491. ஓம் செழுஞ்சுடர்த் தேவே போற்றி.
492. ஓம் சேமந் தருவாய் போற்றி.
493. ஓம் சேம வைப்பே போற்றி.
494. ஓம் சொல்லுக்கு எட்டாய் போற்றி.
495. ஓம் சொற்பதங்கடந்தோய் போற்றி.
496. ஓம் சொற்பொருள் போன்றாய் போற்றி.
497. ஓம் சோதியானாய் போற்றி.
498. ஓம் சோதியுட் சோதியே போற்றி.
499. ஓம் ஞான ஒளியே போற்றி.
500. ஓம் ஞானக் கொழுந்தே போற்றி.
501. ஓம் ஞானச் சுடரே போற்றி.

Koviloor Digital Library

502. ஓம் ஞானத் திரளே போற்றி.
503. ஓம் ஞான விளக்கே போற்றி.
504. ஓம் ஞான மதத்தாய் போற்றி.
505. ஓம் ஞானமாய் அமர்ந்தாய் போற்றி.
506. ஓம் ஞான வள்ளலே போற்றி.
507. ஓம் தடவரைக் குலமே போற்றி.
508. ஓம் தண்ணளி சுரப்பாய் போற்றி.
509. ஓம் தண்மழை முகிலே போற்றி.
510. ஓம் தத்துவ சொரூபா போற்றி.
511. ஓம் தத்துவப் பொருளே போற்றி.
512. ஓம் தத்துவ முதலே போற்றி.
513. ஓம் தத்துவங் கடந்தோய் போற்றி.
514. ஓம் தத்துவ நிலையருள்வாய் போற்றி.
515. ஓம் தந்தி முகனே போற்றி.
516. ஓம் தந்தையே போற்றி.
517. ஓம் தந்தை தாயானாய் போற்றி.
518. ஓம் தமியேன் தலைவா போற்றி.
519. ஓம் தம்பிக்காக வனத்தெழு தமையா போற்றி.
520. ஓம் தருவொடு கொடியானாய் போற்றி.
521. ஓம் தரையாய்த் தாங்குவாய் போற்றி.
522. ஓம் தல நான்கும் தருவாய் போற்றி.
523. ஓம் தவந் தந்தருள்வாய் போற்றி.
524. ஓம் தழற்கேடு தவிர்ப்பாய் போற்றி.
525. ஓம் தழைச் செவியாய் போற்றி.

Koviloor Digital Library

526. ஓம் தழைத்திட வருவாய் போற்றி.
527. ஓம் தற்பர விநாயகா போற்றி.
528. ஓம் தன்மயப் பொருளே போற்றி.
529. ஓம் தன்மையறியப் படாதாய் போற்றி.
530. ஓம் தன்மையிற் குன்றாய் போற்றி.
531. ஓம் தாதையை வலம் வந்தாய் போற்றி.
532. ஓம் தாதையருள் கனியாய் போற்றி.
533. ஓம் தாமதம் தவிர்த்தருள்வாய் போற்றி.
534. ஓம் தாமதம் செய்யாதருள்வாய் போற்றி.
535. ஓம் தாமரையடி தருவாய் போற்றி.
536. ஓம் தாயாய் எழுந்தருள்வாய் போற்றி.
537. ஓம் தாயினும் பரிவாய் போற்றி.
538. ஓம் தாயினும் அருள்வாய் போற்றி.
539. ஓம் தாயினும் நல்லாய் போற்றி.
540. ஓம் தாயே யானாய் போற்றி.
541. ஓம் தாரக மந்திரமே போற்றி.
542. ஓம் தாரகப் பொருளே போற்றி.
543. ஓம் தாழ்செவிக் கோவே போற்றி.
544. ஓம் தானே யானாய் போற்றி.
545. ஓம் திங்கள் வடிவினாய் போற்றி.
546. ஓம் திசைகிழி புயத்தாய் போற்றி.
547. ஓம் திசைத்தேவர் ஆனாய் போற்றி.
548. ஓம் திசைநிறை புகழே போற்றி.
549. ஓம் திரள் குறுந்தாளாய் போற்றி.

Koviloor Digital Library

550. ஓம் திருக்கிளைப் போக்குவாய் போற்றி.
551. ஓம் திருவடி தலை வைப்பாய் போற்றி.
552. ஓம் திருவருள் கரத்தாய் போற்றி.
553. ஓம் திருவார் செம்முகனே போற்றி.
554. ஓம் திருவுளம் பற்றுவாய் போற்றி.
555. ஓம் திறமார் சீரருள்வாய் போற்றி.
556. ஓம் தினைப்புன யானையே போற்றி.
557. ஓம் தீக்குணம் தீர்ப்பாய் போற்றி.
558. ஓம் தீமை விலக்குவாய் போற்றி.
559. ஓம் தீயில் மூன்றானாய் போற்றி.
560. ஓம் தீயே கதிரே போற்றி.
561. ஓம் தீர்த்தமானாய் போற்றி.
562. ஓம் துணை எனக்கு ஆவாய் போற்றி.
563. ஓம் துண்டி விநாயகா போற்றி.
564. ஓம் துப்பார் மேனியாய் போற்றி.
565. ஓம் துயரந் தொலைவிப்பாய் போற்றி.
566. ஓம் துயரிலாது ஆள்வாய் போற்றி.
567. ஓம் துறக்கம் ஆனாய் போற்றி.
568. ஓம் துன்பந் தீர்ப்பாய் போற்றி.
569. ஓம் தூமகேதுவே போற்றி.
570. ஓம் தூய ஞானம் அருள்வாய் போற்றி.
571. ஓம் தூயோர் துணையே போற்றி.
572. ஓம் தெய்வ வாரணமே போற்றி.
573. ஓம் தெவிட்டாக் கனியே போற்றி.

Koviloor Digital Library

574. ஓம் தெவிட்டாத் தெளிவருள்வாய் போற்றி.
575. ஓம் தெளிந்தோர் திருவே போற்றி.
576. ஓம் தேவர்க்குத் தேவே போற்றி.
577. ஓம் தேவர் சிரோமணியே போற்றி.
578. ஓம் தேவர் தலைவா போற்றி.
579. ஓம் தேனின் சுவையே போற்றி.
580. ஓம் தொடரும் துணைவா போற்றி.
581. ஓம் தொண்டரை ஆள்வாய் போற்றி.
582. ஓம் தொண்டர்க்கு எளியாய் போஈற்றி.
583. ஓம் தொண்டர் துணையே போற்றி.
584. ஓம் தொண்டில் இருப்பாய் போற்றி.
585. ஓம் தொலையா இன்பம் அருள்வாய் போற்றி.
586. ஓம் தொல்லுலகு ஆள்வாய் போற்றி.
587. ஓம் தொழில் வினை களிப்பே போற்றி.
588. ஓம் தொழிற்பயன் அருள்வாய் போற்றி.
589. ஓம் நச்சினார்க்கு இனியோய் போற்றி.
590. ஓம் நடப்பன ஆனாய் போற்றி.
591. ஓம் நடுவாய் விளங்குவாய் போற்றி.
592. ஓம் நட்பும் ஆனாய் போற்றி.
593. ஓம் நத்துவார் சேவக போற்றி.
594. ஓம் நந்தா விளக்கே போற்றி.
595. ஓம் நந்தியின் மகனே போற்றி.
596. ஓம் நலமே புரிவாய் போற்றி.
597. ஓம் நல்லவர் உளத்தாய் போற்றி.

Koviloor Digital Library

598. ஓம் நல்லவை அருள்வாய் போற்றி.
599. ஓம் நல்லின்பம் தருவாய் போற்றி.
600. ஓம் நவசக்தி உகந்தாய் போற்றி.
601. ஓம் நவந்தரு பேதனே போற்றி.
602. ஓம் நவமதியானாய் போற்றி.
603. ஓம் நளின பதத்தாய் போற்றி.
604. ஓம் நற்கரி முகத்தாய் போற்றி.
605. ஓம் நற்குணம் நல்குவாய் போற்றி.
606. ஓம் நற்குண வடிவே போற்றி.
607. ஓம் நாகப்பூண் ஆர்த்தாய் போற்றி.
608. ஓம் நாத முடிவே போற்றி.
609. ஓம் நாதாந்த நலமே போற்றி.
610. ஓம் நாமந்தரித்தோன் மருகா போற்றி.
611. ஓம் நாலிருபுயத்தாய் போற்றி.
612. ஓம் நாவமர் பாடலே போற்றி.
613. ஓம் நாவாயாம் பதமே போற்றி.
614. ஓம் நாற்பதம் ஆனாய் போற்றி.
615. ஓம் நாற்றிசைத் தலைவா போற்றி.
616. ஓம் நான்ற வாயினாய் போற்றி.
617. ஓம் நிமலா நித்தியா போற்றி.
618. ஓம் நிருவிகற்பமாய் நின்றாய் போற்றி.
619. ஓம் நிருவிகாரப் பொருளே போற்றி.
620. ஓம் நிர்க்குண இறைவா போற்றி.
621. ஓம் நிலமும் நீரும் ஆனாய் போற்றி.

Koviloor Digital Library

622. ஓம் நிலையாய் நிற்பாய் போற்றி.
623. ஓம் நிலையே நல்குவாய் போற்றி.
624. ஓம் நிழல்போல் துணையே போற்றி.
625. ஓம் நிறை திருஅருள்வாய் போற்றி.
626. ஓம் நிறையருள் தருவாய் போற்றி.
627. ஓம் நிறை வாழ்வு அருள்வாய் போற்றி.
628. ஓம் நிறைவே சேர்ப்பாய் போற்றி.
629. ஓம் நிற்பன ஆனாய் போற்றி.
630. ஓம் நிர்மலப் பொருளே போற்றி.
631. ஓம் நின்பால் அன்பினோர்க்கு நேயனே போற்றி.
632. ஓம் நின்னடி தருவாய் போற்றி.
633. ஓம் நின்னடியே துணையாம் போற்றி.
634. ஓம் நின்னளந்து அறிதற்கு அரியாய் போற்றி.
635. ஓம் நீக்கமற நிறைந்தாய் போற்றி.
636. ஓம் நீதியாய் நின்றாய் போற்றி.
637. ஓம் நீராவி போன்றாய் போற்றி.
638. ஓம் நீரில் நான்கானாய் போற்றி.
639. ஓம் நீரே காற்றே போற்றி.
640. ஓம் நீல மேனியாய் போற்றி.
641. ஓம் நீள்புகழ் தருவாய் போற்றி.
642. ஓம் நீள்வான் ஆனாய் போற்றி.
643. ஓம் நீறுகந்தார் நிமலா போற்றி.
644. ஓம் நுதற் கண்ணினாய் போற்றி.
645. ஓம் நுதற்கண் தீயாய் போற்றி.

Koviloor Digital Library

646. ஓம் நூபுர சரணா போற்றி.
647. ஓம் நூறாண்டு அருள்வாய் போற்றி.
648. ஓம் நூற்பொருள் அளிப்பாய் போற்றி.
649. ஓம் நெஞ்சத்து ஒடுங்குவாய் போற்றி.
650. ஓம் நெஞ்சமலர் இருப்பாய் போற்றி.
651. ஓம் நெஞ்சநோய் தீர்ப்பாய் போற்றி.
652. ஓம் நெஞ்சில் நிறைவு அருள்வாய் போற்றி.
653. ஓம் நெஞ்சு குடிகொண்டாய் போற்றி.
654. ஓம் நெறி நிற்பார் நேயா போற்றி.
655. ஓம் நெறியிலார்க்கு அரியாய் போற்றி.
656. ஓம் நேசத் தளைப்படுவாய் போற்றி.
657. ஓம் நேசத்தே யாள்வாய் போற்றி.
658. ஓம் நேயமே துய்ப்பாய் போற்றி.
659. ஓம் நேர்வார் இல்லாய் போற்றி.
660. ஓம் நோவு தவிர்ப்பாய் போற்றி.
661. ஓம் பகவனே கணேசா போற்றி.
662. ஓம் பகையினைத் தீர்ப்பாய் போற்றி.
663. ஓம் பக்குவச் சொல்லுதவுவாய் போற்றி.
664. ஓம் பசுஞானம் பற்றாய் போற்றி.
665. ஓம் பசுஞானம் கடந்தாய் போற்றி.
666. ஓம் பசுஞானம் மாற்றுவாய் போற்றி.
667. ஓம் பசுபதி பரமா போற்றி.
668. ஓம் பச்சிலை ஏற்பாய் போற்றி.
669. ஓம் படைப்பாய் காப்பாய் போற்றி.

Koviloor Digital Library

670. ஓம் பண்ணிடைத் தமிழே போற்றி.
671. ஓம் பண்பிலார்க்கு அரியாய் போற்றி.
672. ஓம் பண்புகள் தருவாய் போற்றி.
673. ஓம் பதப்புணை தருவாய் போற்றி.
674. ஓம் பதியே கதியே போற்றி.
675. ஓம் பத்தர்க்கு அருள்வாய் போற்றி.
676. ஓம் பத்தரின் நிதியே போற்றி.
677. ஓம் பந்தநோய் பாற்றுவாய் போற்றி.
678. ஓம் பந்தமும் ஆனாய் போற்றி.
679. ஓம் பந்தந் தீர்ப்பாய் போற்றி.
680. ஓம் பரப்பிரமமே போற்றி.
681. ஓம் பரப்பெலாம் ஆனாய் போற்றி.
682. ஓம் பரம தயாளா போற்றி.
683. ஓம் பரம கணேசா போற்றி.
684. ஓம் பரமன் சிறுவா போற்றி.
685. ஓம் பரவடிவே போற்றி.
686. ஓம் பரவுவார்க்கு அமுதே போற்றி.
687. ஓம் பரிதிபோல் உள்ளொளி படைப்பாய் போற்றி.
688. ஓம் பல்லியம் பலவும் பயிற்றுவாய் போற்றி.
689. ஓம் பல்வேறு உருவினாய் போற்றி.
690. ஓம் பழத்திற் சுவையே போற்றி.
691. ஓம் பழம்பொருள் நீயே போற்றி.
692. ஓம் பழவடியார் துணை தருவாய் போற்றி.
693. ஓம் பழியிலா வாழ்வு தந்தருள்வாய் போற்றி.

Koviloor Digital Library

694. ஓம் பற்பல இசையும் ஆனாய் போற்றி.
695. ஓம் பற்பல கலையும் ஆனாய் போற்றி.
696. ஓம் பாசக் கவளத்தாய் போற்றி.
697. ஓம் பாசங்களைவாய் போற்றி.
698. ஓம் பாசஞானம் பற்றாய் போற்றி.
699. ஓம் பாசஞானம் தருவாய் போற்றி.
700. ஓம் பாசஞானம் கடந்தாய் போற்றி.
701. ஓம் பாசஞானம் பாற்றுவாய் போற்றி.
702. ஓம் பாசாங்குசத்தாய் போற்றி.
703. ஓம் பாடல் உவப்பாய் போற்றி.
704. ஓம் பாதிமதி சூடுவாய் போற்றி.
705. ஓம் பாம்பை அணிந்தாய் போற்றி.
706. ஓம் பாரதம் எழுதினாய் போற்றி.
707. ஓம் பாரிடம் ஆனாய் போற்றி.
708. ஓம் பார்வதி செல்வா போற்றி.
709. ஓம் பாரும் விண்ணும் ஆனாய் போற்றி.
710. ஓம் பாலச்சந்திரனே போற்றி.
711. ஓம் பாலெனச் சுவைப்பாய் போற்றி.
712. ஓம் பால் நிலா மருப்பினாய் போற்றி.
713. ஓம் பாவம் பாற்றுவாய் போற்றி.
714. ஓம் பிணிகள் களைவாய் போற்றி.
715. ஓம் பிணிகள் தவிர்ப்பாய் போற்றி.
716. ஓம் பிரணவப் பொருளே போற்றி.
717. ஓம் பிரணவ வடிவே போற்றி.

Koviloor Digital Library

718. ஓம் பிரணவக் களிறே போற்றி.
719. ஓம் பிரியா விமலா போற்றி.
720. ஓம் பிழையின்றி ஆள்வாய் போற்றி.
721. ஓம் பிழை பொறுப்பாய் போற்றி.
722. ஓம் பிள்ளையார் ஆனாய் போற்றி.
723. ஓம் பிறப்பிலாப் பெருமானே போற்றி.
724. ஓம் பிறப்பை ஒழிப்பாய் போற்றி.
725. ஓம் பிறை சூடும் பெம்மானே போற்றி.
726. ஓம் பிறை தாழ் சடையாய் போற்றி.
727. ஓம் பிறை மருப்பு உடையாய் போற்றி.
728. ஓம் புகர் முகத்தாய் போற்றி.
729. ஓம் புகலிடம் ஆனாய் போற்றி.
730. ஓம் புகல் உனக்கில்லாய் போற்றி.
731. ஓம் புகழ்வாரை ஆள்வாய் போற்றி.
732. ஓம் புகழ் தருவாய் போற்றி.
733. ஓம் புகழ் பெருக்குவாய் போற்றி.
734. ஓம் புண்ணியத் தலம் ஆனாய் போற்றி.
735. ஓம் புண்ணியம் புரப்பாய் போற்றி.
736. ஓம் புண்ணிய மூர்த்தி போற்றி.
737. ஓம் புதுவினை தவிர்ப்பாய் போற்றி.
738. ஓம் புத்திப் புதுவிருந்தே போற்றி.
739. ஓம் புத்தியாம் இச்சையாய் போற்றி.
740. ஓம் புராணம் ஆனாய் போற்றி.
741. ஓம் புரிநூலந்தணனே போற்றி.

Koviloor Digital Library

742. ஓம் புரிந்து இன்னருள் தருவாய் போற்றி.
743. ஓம் புலமையருள்வாய் போற்றி.
744. ஓம் புலவரும் ஆனாய் போற்றி.
745. ஓம் புலனடக்கம் அருள்வாய் போற்றி.
746. ஓம் புவியெல்லாம் ஆனாய் போற்றி.
747. ஓம் புவி வயிற்றாய் போற்றி.
748. ஓம் புழைக்கைப் புனிதா போற்றி.
749. ஓம் புறமும் அகமும் ஆனாய் போற்றி.
750. ஓம் புற்பூடும் ஆனாய் போற்றி.
751. ஓம் புனலிற் பொற்பே போற்றி.
752. ஓம் புனற்கேடு தவிர்ப்பாய் போற்றி.
753. ஓம் புனிதன் ஆனாய் போற்றி.
754. ஓம் புண்ணியன் ஆனாய் போற்றி.
755. ஓம் பூதநாதனே போற்றி.
756. ஓம் பூந்துகில் ஆடையாய் போற்றி.
757. ஓம் பூவில் வாசமே போற்றி.
758. ஓம் பெயரா நலத்தினாய் போற்றி.
759. ஓம் பெரிதும் அரியாய் போற்றி.
760. ஓம் பெரிய வீடு அருள்வாய் போற்றி.
761. ஓம் பெரிய கணபதியே போற்றி.
762. ஓம் பெருந்தோள் தீரா போற்றி.
763. ஓம் பெரும்பாரக் கோட்டாய் போற்றி.
764. ஓம் பேரருளாளா போற்றி.
765. ஓம் பேரருள் தருவாய் போற்றி.

Koviloor Digital Library

766. ஓம் பேரறிவு தருவாய் போற்றி.
767. ஓம் பேராகிப் பரந்தாய் போற்றி.
768. ஓம் பேரானந்த நிறைவே போற்றி.
769. ஓம் பேழை வயிற்றினாய் போற்றி.
770. ஓம் பையரவு அசைத்தாய் போற்றி.
771. ஓம் பொங்காப் பொறையே போற்றி.
772. ஓம் பொய்யாக் கணபதியாய் போற்றி.
773. ஓம் பொய்யுளம் புகாதாய் போற்றி.
774. ஓம் பொருந்த அடியார் உளம்புகுவாய் போற்றி.
775. ஓம் பொருவிடையான் சேயே போற்றி.
776. ஓம் பொருவில் தீர்த்தம் ஆனாய் போற்றி.
777. ஓம் பொருளெவையினும் பெரியோய் போற்றி.
778. ஓம் பொருள் தருவாய் போற்றி.
779. ஓம் பொருள் நான்கும் தருவாய் போற்றி.
780. ஓம் பொலம் பட்டுடையாய் போற்றி.
781. ஓம் பொல்லாப் பிள்ளையாய் போற்றி.
782. ஓம் பொழி பெருங்கருணையாய் போற்றி.
783. ஓம் பொறையும் ஆனாய் போற்றி.
784. ஓம் பொற்குடம் ஏந்தினாய் போற்றி.
785. ஓம் பொற்சரணம் அளிப்பாய் போற்றி.
786. ஓம் பொற்பார் வாழ்வருள்வாய் போற்றி.
787. ஓம் பொன்னடி தருவாய் போற்றி.
788. ஓம் பொன்னுலகு அளிப்பாய் போற்றி.
789. ஓம் பொன்னோடை நெற்றியாய் போற்றி.

Koviloor Digital Library

790. ஓம் போகம் அருள்வாய் போற்றி.
791. ஓம் போகமாய் பொலிவாய் போற்றி.
792. ஓம் போக நாயகா போற்றி.
793. ஓம் போகியும் யோகியும் ஆனாய் போற்றி.
794. ஓம் போக்குவரவிலாய் போற்றி.
795. ஓம் போக வடிவே போற்றி.
796. ஓம் போகப் பொருளே போற்றி.
797. ஓம் போற்றும் முக்திதருவாய் போற்றி.
798. ஓம் மகத்துக்கு ஈசா போற்றி.
799. ஓம் மங்கல வடிவினாய் போற்றி.
800. ஓம் மங்காப் புகழே போற்றி.
801. ஓம் மண்பகை தவிர்ப்பாய் போற்றி.
802. ஓம் மணக்கும் சேவடியாய் போற்றி.
803. ஓம் மணக்கும் பதம் அருள்வாய் போற்றி.
804. ஓம் மணமும் ஆனாய் போற்றி.
805. ஓம் மணி நீலகண்டனே போற்றி.
806. ஓம் மணிவண்ணன் மருகா போற்றி.
807. ஓம் மண்ணுலக நாதா போற்றி.
808. ஓம் மதநீர்க்கபோலா போற்றி.
809. ஓம் மதிப்பவர் மனத்துளாய் போற்றி.
810. ஓம் மதிப்பார் மனமணி விளக்கே போற்றி.
811. ஓம் மதிப்பார் மனமாண்பே போற்றி.
812. ஓம் மதிவளர் முடியாய் போற்றி.
813. ஓம் மதியினை வளர்ப்பாய் போற்றி.

Koviloor Digital Library

814. ஓம் மதியிருள் கெடுப்பாய் போற்றி.
815. ஓம் மதியே உயிரே போற்றி.
816. ஓம் மதியொணா மாண்பே போற்றி.
817. ஓம் மத்தள வயிற்றனே போற்றி.
818. ஓம் மந்திர சொரூபா போற்றி.
819. ஓம் மந்திர நல்லடியாய் போற்றி.
820. ஓம் மந்திர உருவாய் போற்றி.
821. ஓம் மந்திரப் பெயரினாய் போற்றி.
822. ஓம் மந்திரப் பொருளாய் போற்றி.
823. ஓம் மயக்கந் தீர்ப்பாய் போற்றி.
824. ஓம் மயலை மாற்றுவாய் போற்றி.
825. ஓம் மருந்தாம் மலரடியாய் போற்றி.
826. ஓம் மருப்பெழுத்து ஆணியாய் போற்றி.
827. ஓம் மருப்பொரு கையாய் போற்றி.
828. ஓம் மருளிலா மனத்தாய் போற்றி.
829. ஓம் மலந்தூள் ஆக்குவாய் போற்றி.
830. ஓம் மலமயக்கு அறுப்பாய் போற்றி.
831. ஓம் மலரும் ஆனாய் போற்றி.
832. ஓம் மலரில் பொலிவாய் போற்றி.
833. ஓம் மலைமகள் பாலா போற்றி.
834. ஓம் மவுனம் அருள்வாய் போற்றி.
835. ஓம் மழுவொரு கையாய் போற்றி.
836. ஓம் மழைபோல் மதத்தாய் போற்றி.
837. ஓம் மறக்கருணையாய் போற்றி.

Koviloor Digital Library

838. ஓம் மறவா வரமருள்வாய் போற்றி.
839. ஓம் மறிகடல் ஆனாய் போற்றி.
840. ஓம் மறைமுதல் மூர்த்தியே போற்றி.
841. ஓம் மறை காணாக் கதியே போற்றி.
842. ஓம் மறையாய் மன்னுவாய் போற்றி.
843. ஓம் மனக் கோயிலாய் போற்றி.
844. ஓம் மனச் சுமை தீர்ப்பாய் போற்றி.
845. ஓம் மனத்துறு விளக்கே போற்றி.
846. ஓம் மனமாசு அறுப்பாய் போற்றி.
847. ஓம் மன வீடு இருப்பாய் போற்றி.
848. ஓம் மன்னும் அருளாய் போற்றி.
849. ஓம் மன்னுயிர்க்கு உயிரே போற்றி.
850. ஓம் மனோலயந் தருவாய் போற்றி.
851. ஓம் மன்றத் தலைமை தருவாய் போற்றி.
852. ஓம் மன்றாடி மைந்தா போற்றி.
853. ஓம் மாகணத் தீசா போற்றி.
854. ஓம் மாசிலா மணியே போற்றி.
855. ஓம் மாண்பொருள் ஆனாய் போற்றி.
856. ஓம் மாதங்க முகத்தாய் போற்றி.
857. ஓம் மாதுளங்கனி வென்றாய் போற்றி.
858. ஓம் மாதுளந் தரித்தாய் போற்றி.
859. ஓம் மாயங்கிழிப்பாய் போற்றி.
860. ஓம் மாயை மயக்கறுமணியே போற்றி.
861. ஓம் மாரத அச்சிறுத்தாய் போற்றி.

Koviloor Digital Library

862. ஓம் மால்வரை ஆனாய் போற்றி.
863. ஓம் மிருதி நூல் ஆனாய் போற்றி.
864. ஓம் முக்கடாம் பொழிவாய் போற்றி.
865. ஓம் முக்கட் கரும்பே போற்றி.
866. ஓம் முக்கட் களிறே போற்றி.
867. ஓம் முக்கணான் சேயே போற்றி.
868. ஓம் முக்கண் முதல்வா போற்றி.
869. ஓம் முக்காரணமும் ஆனாய் போற்றி.
870. ஓம் முக்காரணனும் ஆனாய் போற்றி.
871. ஓம் முச்சுடரும் ஆனாய் போற்றி.
872. ஓம் முடியா முதலே போற்றி.
873. ஓம் முடிவாய் விளங்குவாய் போற்றி.
874. ஓம் முடிவிலா இன்பமே போற்றி.
875. ஓம் முண்டகத்தாள் தருவாய் போற்றி.
876. ஓம் முதலாகி மூத்தாய் போற்றி.
877. ஓம் முதலீறில் பொருளே போற்றி.
878. ஓம் முதற் பூசனையாய் போற்றி.
879. ஓம் முத்தனே அருளாய் போற்றி.
880. ஓம் முத்தி இனிதருள்வாய் போற்றி.
881. ஓம் முத்திப் பொருளே போற்றி.
882. ஓம் முத்தி நாயகா போற்றி.
883. ஓம் முத்திக்கு வித்தே போற்றி.
884. ஓம் முப்பழம் நுகர்வாய் போற்றி.
885. ஓம் முப்புரிநூல் மார்பா போற்றி.

Koviloor Digital Library

886. ஓம் முப்பொருள் தெளிப்பாய் போற்றி.
887. ஓம் மும்மலங் கடந்தாய் போற்றி.
888. ஓம் முயல்வார்க்கு எளியாய் போற்றி.
889. ஓம் முருகமர் தொடையாய் போற்றி.
890. ஓம் முருகன் முன்னவா போற்றி.
891. ஓம் முழுமுதற் பூரணா போற்றி.
892. ஓம் முற்றாப் போராளியே போற்றி.
893. ஓம் மூக்கில் வாயுடையாய் போற்றி.
894. ஓம் மூடிக வாகனா போற்றி.
895. ஓம் மூலசத்தி முதல்வா போற்றி.
896. ஓம் மூலப்பொருளே போற்றி.
897. ஓம் மூலமே முடிவே போற்றி.
898. ஓம் மூலாதாரத்துளாய் போற்றி.
899. ஓம் மூவரும் ஆனாய் போற்றி.
900. ஓம் மூவர் காரணனே போற்றி.
901. ஓம் மூவர்க்கும் தேனே போற்றி.
902. ஓம் மூவா மேனியாய் போற்றி.
903. ஓம் மூர்த்தியே தயவே போற்றி.
904. ஓம் மூவிழியுடையாய் போற்றி.
905. ஓம் மூவுயிரும் ஆனாய் போற்றி.
906. ஓம் மூவுருவம் ஆனாய் போற்றி.
907. ஓம் மூவுலகும் ஆனாய் போற்றி.
908. ஓம் மூவுலகின் தாயே போற்றி.
909. ஓம் மூவேழுலகும் ஆனாய் போற்றி.
910. ஓம் மெய்ப்பொருள் ஆனாய் போற்றி.

Koviloor Digital Library

911. ஓம் மெய்யர் மெய்யே போற்றி.
912. ஓம் மெலிவு தவிர்ப்பாய் போற்றி.
913. ஓம் மேலறிவாம் தேசனே போற்றி.
914. ஓம் மேலாம் பொருளே போற்றி.
915. ஓம் மேற்குணம் தருவாய் போற்றி.
916. ஓம் மோதகக் கையினாய் போற்றி.
917. ஓம் யாவும் ஆனாய் போற்றி.
918. ஓம் யாவுந் தோற்றுவாய் போற்றி.
919. ஓம் யாவும் ஒடுக்கினாய் போற்றி.
920. ஓம் யோகத் தறியுளாய் போற்றி.
921. ஓம் யோகத்து உருவே போற்றி.
922. ஓம் யோகமும் பயில்வாய் போற்றி.
923. ஓம் யோகியும் ஆனாய் போற்றி.
924. ஓம் வஞ்சமிலா மனத்து உறைவாய் போற்றி.
925. ஓம் வஞ்சனை தீர்ப்பாய் போற்றி.
926. ஓம் வடிவேலன் அண்ணா போற்றி.
927. ஓம் வணங்குவோர்க்கு இன்பமே போற்றி.
928. ஓம் வண்ணமூர்த்தியே போற்றி.
929. ஓம் வண்மைத் தேவே போற்றி.
930. ஓம் வண்மையிற் குன்றாய் போற்றி.
931. ஓம் வரங்கள் தருவாய் போற்றி.
932. ஓம் வரத விநாயகா போற்றி.
933. ஓம் வரந்தரும் வள்ளலே போற்றி.
934. ஓம் வருவினை தீர்ப்பாய் போற்றி.
935. ஓம் வலக்கண் கதிராய் போற்றி.

Koviloor Digital Library

936. ஓம் வலஞ்சுழி விநாயகா போற்றி.
937. ஓம் வல்லபை துணைவா போற்றி.
938. ஓம் வல்லபை வல்லவா போற்றி.
939. ஓம் வல்லபை கணேசா போற்றி.
940. ஓம் வழங்கும் கருணையாய் போற்றி.
941. ஓம் வளிப்பகை தவிர்ப்பாய் போற்றி.
942. ஓம் வளியில் இரண்டு ஆனாய் போற்றி.
943. ஓம் வள்ளல் திருவடியே போற்றி.
944. ஓம் வறுமை மாற்றுவாய் போற்றி.
945. ஓம் வற்றா இன்பக்கடலே போற்றி.
946. ஓம் வற்றாக் கருணையாய் போற்றி.
947. ஓம் வன்னியணிவாய் போற்றி.
948. ஓம் வாக்கிற்கு எட்டாய் போற்றி.
949. ஓம் வாசக் கொன்றையாய் போற்றி.
950. ஓம் வாடாமல் வழங்குவாய் போற்றி.
951. ஓம் வாட்டுங் கவலை தீர்ப்பாய் போற்றி.
952. ஓம் வாதாபி கணபதியே போற்றி.
953. ஓம் வாயிற் கொம்பினாய் போற்றி.
954. ஓம் வாரண முகவா போற்றி.
955. ஓம் வாரண நின்மலர்த்தாளே போற்றி.
956. ஓம் வாழ்வானந்தமே போற்றி.
957. ஓம் வாளமர் கண்ணாய் போற்றி.
958. ஓம் வாழ்வின் வரமே போற்றி.
959. ஓம் வானவர் மருந்தே போற்றி.
960. ஓம் வானாடர் தலைவா போற்றி.

Koviloor Digital Library

961. ஓம் வானினும் உயர்ந்தாய் போற்றி.
962. ஓம் வான்பதம் அருள்வாய் போற்றி.
963. ஓம் வான்மறைத் தலைவா போற்றி.
964. ஓம் விகட சக்கர விநாயகா போற்றி.
965. ஓம் விகாரப் படாதாய் போற்றி.
966. ஓம் விகாரமில் ஒளியே போற்றி.
967. ஓம் விகிர்தா கணபதியே போற்றி.
968. ஓம் விக்கின விநாயகா போற்றி.
969. ஓம் விக்கின சமர்த்தா போற்றி.
970. ஓம் விக்கினேச் சுரனே போற்றி.
971. ஓம் விசும்புயர் சிரத்தாய் போற்றி.
972. ஓம் விண்ணுக்கு நாதா போற்றி.
973. ஓம் விண்பகை தவிர்ப்பாய் போற்றி.
974. ஓம் விண்மழை தருவாய் போற்றி.
975. ஓம் விண்முதல் ஐந்தே போற்றி.
976. ஓம் விதியை வெல்வாய் போற்றி.
977. ஓம் வித்தக விநாயகா போற்றி.
978. ஓம் வித்தைகளின் பிறப்பிடமே போற்றி.
979. ஓம் வித்தைக்கு உறையுளே போற்றி.
980. ஓம் வித்தைக்குத் துணைவா போற்றி.
981. ஓம் விரும்பி வீற்றிருப்பாய் போற்றி.
982. ஓம் விழி பருகும் அழகா போற்றி.
983. ஓம் விழைவார் உளத்தாய் போற்றி.
984. ஓம் வினைகள் தீர்ப்பாய் போற்றி.
985. ஓம் வினையிலாதானே போற்றி.

Koviloor Digital Library

986. ஓம் வினைப்பயன் ஊட்டுவாய் போற்றி.
987. ஓம் வினையின் முதல் களைவாய் போற்றி.
988. ஓம் வீடருள் விமலா போற்றி.
989 ஓம் வீடு ஆனாய் போற்றி.
990. ஓம் வீட்டின்பம் ஆனாய் போற்றி.
991. ஓம் வெண்கோட்டினாய் போற்றி.
992. ஓம் வெம்மை தவிர்ப்பாய் போற்றி.
993. ஓம் வெயிற்கோர் நிழலே போற்றி.
994. ஓம் வெளியில் ஒன்றே போற்றி.
995. ஓம் வெள்ள வேணியாய் போற்றி.
996. ஓம் வெற்றித் திருவே போற்றி.
997. ஓம் வேட்கை தணிப்பாய் போற்றி.
998. ஓம் வேத கணபதியே போற்றி.
999. ஓம் வேத காரணா போற்றி.
1000. ஓம் வேத கீதா போற்றி.
1001. ஓம் வேதப் பொருளே போற்றி.
1002. ஓம் வேதங்காட்டும் வேதியா போற்றி.
1003. ஓம் வேதம் தேடும் விகிர்தா போற்றி.
1004. ஓம் வேதம் ஆனாய் போற்றி.
1005. ஓம் வேத முடிவே போற்றி.
1006. ஓம் வேழ முகத்தாய் போற்றி.
1007. ஓம் வேறாய் நின்றாய் போற்றி.
1008. ஓம் வைத்த மாநிதியே போற்றி! போற்றி!!

Koviloor Digital Library

பாடல் : விநாயகர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

38428

வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

அருள்மிகு விநாயகப் பெருமான் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக. மங்கலம் உண்டாகுக.

Koviloor Digital Library

Koviloor Digital Library

அச்சிட்டோர் :- கிரியா ஸ்கிரீன்ஸ். (D.T.P. & ஆப்செட்) திருச்சி -8. ✆ 711231.